ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கம்பராமாயணத்தில் தாடகையின் ஆளுமை

**சி.கலைச்செல்வி,**
**முனைவர்பட்டஆய்வாளர்**
**அய்யநாடார்ஜானகிஅம்மாள்கல்லூரி (தன்னாட்சி),**
**சிவகாசி.**

## முன்னுரை

கம்பராமாயணத்தில் கம்பனால் படைக்கப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் ஆளுமைத் தன்மையில் சளைத்தவர்கள் அல்ல. ஒரு மிகப் பெரிய கட்டிடத்தின் அஸ்திவாரம் ஆளுமை.ஒரு செயல் செய்வதற்கு முன்பு சற்றே யோசித்தல், பின் விளைவுகளை தொலை நோக்குப் பார்வையில் பார்த்தல், அளவிடல், அவசியப்பட்டால், பிறரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுதல், குழப்பமற்ற மனோபாவத்துடன் செயல்படுவதற்குத் தன்னைத்த யார்ப் படுத்துதல் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். தாடகை வதத்தின் போது அவளைவதம் செய்வதற்கு முன் பெண் என்று யோசிக்கின்றான் பெருங்குணத் தவனான இராமன். பின்பு விசுவாமித்திரர் சொல்வதைக் கேட்டு தாடகையைக் கொல்கின்றான். தாடகையின் ஆளுமையை உறுதியானவளாகவும், வீரமிக்கவளாகவும், ஆண்களுக்கு நிகராக வலிமைப் படைத்தவளாகவும், மிகவும் சிறப்பு வாய்ந்தவளாகவும் கம்பர் படைத்திருக்கிறார்.

## ஆளுமைபண்புகள்

ஆளுமை பண்புகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.அவை பின் வருமாறு

1) முடிவெடுக்கும் திறன்,

2) நேர்மையற்ற எண்ணங்கள்,

3) தகவல் பரிமாற்றத்திறன்,

4) நேரத்தைக் கையாளுதல்

இவை நான்கும் வேதங்களைப் போன்றது.

**பாலை நிலத்தின் தன்மைகள்**

பாலை என்னும் சொல்லுக் குரிய பல பொருள்களில் ‘வெம்மை’ என்பதும் ஒன்று.‘பாலை நின்ற பாலை நெடுவழி’ எனச் சிறுபாணாற்றுப் படை குறிப்பிடுகிறது. “பாலைத் தன்மையாவது, காலையும் மாலையும் நண்பகலைப் போன்ற கடுமை உடைமை என்பது தொல்காப்பியர் உரையில், காட்டும் விளக்கம்” என்று புலவர் வேலாயுதன் குறிப்பிடுகிறார்.

பாலை நிலத்திற் குரிய காளிதேவியும் ஓரிடத்தில் நில்லாமல் எப்பொழுதம் ஓடிக்கொண்டேயிருப்பாள். ஓடாமல் ஓரிடத்திலேயே நிற்பாளாயின் அவளும் வெந்து போவாள்.தீக்கடவுகளும் அரசுவீற்றிருத்தற்கு இடமான அப்பாலை நிலத்திலே வானில் பறக்கும் காக்கைகளும் கானில் திரியும் யானைகளும் வெப்பம் தாங்காமல் வெந்து உயிரிழந்தன.இத்தகைய கொடிய பாலை நில வெப்பத்திற்கு இராம, இலக்குவன் வருந்துவர் என்றெண்ணிய விசுவாமித்திர முனிவர் இவ்விருவருக்கும் வெப்பத்தின் கொடுமையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக, ‘பலை, அதிபலை’ என்னும் இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். இம்மந்திரத்தின் ஆற்றலால் பாலை நிலம் இராம, இலக்குவனுக்கு குளிர்ச்சியடைந்ததை,

**“நோக்கினன் அவன் முகம், நோக்க நோக் குடைக்**

**கோக் குமரன் அடிகுறுகு, நான் முகன்**

**ஆக்கின விஞ்ஞைகள் இரண்டும் அவ்வழி**

**ஊக்கினன் அவை அவர் உள்ளத்து உள்ளினார்”**

**(பா.கா. தாடகைவதைப்படலம்: பா.18)**

என்ற பாடலின் வழி அறிய முடிகிறது. விசுவாமித்திரைப் பார்த்து, இந்த நிலம் மாறியதற்கான காரணத்தைக் கேட்ட போது முனிவன் தாடகையின் வரலாற்றைக்கூறத் தொடங்கினார்.

விசுவாமித்திரர், பாலை நிலமானது மிகுந்த கொடிய தன்மை உடையதாகும். அந்நிலத்தில் உள்ள ஈரம் முழுவதையும் காயச்செய்வதற்குக் கதிரவன் எந்நேரமும் கொடிய வெப்பத்தை வீசிக்கொண்டிருந்தான். தீக்கடவுளும் அந்நிலத்தின் தன்மையை நினைப்பானாகில் அவன் உள்ளமும் வெந்துவிடும். பார்த்தால் கண்களும் வெந்து போவதாக,

**“பருதி வானவன் நிலம்பசை அறப்பருகுவான்**

**விருது மேற்கொண்டு உலாம் வேனிலே அல்லதோர்**

**இருது வேறு இன்மையால் எரிசுடர்க் கடவுளும்**

**கருதின் வேம் உள்ளமும் காணின் வேம் நயனமும்”**

**(பா.கா. தாடகைவதைப்படலம்., பா.5)**

எனக் கம்பரின் கவிக் கூற்றின் மூலம் அறியலாம். இப்பாலைவனத்தின் வெப்பத்தை,

**“காடு இதனைக் கடத்தும் எனக் கருமுகிலும்**

**வெண்மதியும் கடக்க அப்பால்**

**ஓடி இளைத்து உடல் வியர்த்த வியர்வுமன்றோ**

**உகுபுனலும்பனியும் ஐயோ”**

என்று கலிங்கத்துப்பரணி விளக்குகிறது. கம்பனோ இதையும் மிஞ்சி பாலை நிலத்தின் வெம்மையைக் கூறினால் கூறுகிற நாவும் வெந்து போகும்.உலகத்தை எல்லாம் மூடிக் கொண்டுள்ள இருளும் வெந்து போகும்.அண்டகோளத்தின் மேன் முகடும் வெந்து போகும் என்பதை,

**“படியின் மேல்வெம்மையைப்**

**பகரினும், பகரும்நா**

**முடியவேம்முடியமூடுஇருளும்**

**வான்முகடும்வேம்”**

**(பா.கா. தாடகைவதைப்படலம்: பா.6)**

என்ற பாடலடிகள் மூலம் விளக்குகிறார்.

**தாடகைபிறப்பும், வரலாறும்**

**தாடகைபிறப்பு**

தெளிந்தசிந்தனை, பரந்த அறிவு இவை இரண்டும் வாய்க்கப் பெற்றவனாகியசு கேது என்பவனின் மகளே தாடகை. தாடகையின் தந்தையான சுகேது பகைவர்களுக்கு எமனாக விளங்கு வதை கம்பர் சுட்டுகிறார். அப்படிப்பட்ட வல்லமை வாய்ந்த சுகேதுவுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் படைப்புக் கடவுளாகிய பிரம்மனை நோக்கிதவம் மேற்கொள்ள பிரம்மன் அருளால், அழகிய இளமையானமயில் போன்ற பேரழகும், ஆயிரம்யானையின் வலிமையும் பெற்ற பெண்மகவு உண்டு எனவரம் அருளினான். இலக்குமியை ஒத்த அழகுடையமகள் பிறந்ததை,

**“பூமடமயிலினைப்பொருவும்பொற்பொடும்**

**ஏமறுமதமலைஈர்- ஐஞ்நூறுடைத்**

**தாம்மிகுவலியோடும்தனையதோன்றும்நீ**

**போயெனமலர்அயன்புகன்றுபோயினான்”**

**(பா.கா. தாடகைவதைப்படலம்: மிகை.பா.76)**

**“ஆயவன்அருள்வழிஅலர்ந்ததாமரைச்சேயவள்”**

**(பா.கா. தாடகைவதைப்படலம்: மிகை.பா.77)**

நான் முகன் வரத்தால் அழகிய பெண் பிறந்ததைக் கம்பன் பதிவுசெய்கிறார்.

**தாடகைபெயர்அமைப்பு**

கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள பாத்திரங்கள் பண்புகளின் அடிப்படையில் பெயர்களைப் பெற்றுள்ளன.அவ்வகையில் தாடகை என்பதற்கு "மலையில் சஞ்சரிப்பவள் என்றும் மந்திரமலையைப் போன்றகையையுடையவள்" 3 எனப்பொருள்படும்.

"தாழ், தாழை, தாளி ஆகிய சொற்கள் முறையே நீளம், தென்னைமரம், பனைமரம் என்று பொருள் தருகின்றன. தென்னை அல்லது பனைமரம் போன்று நீண்ட கைகளைப் பெற்றிருந்தமையால் இவளுக்குத் தாடகை (தாழ்கையள்)"4 எனப்பொருள்படும். தாடகை தோற்றப் பொலிவுக்கேற்ற பெயராக அமைந்துள்ளது.

**தாடகைதிருமணம்**

பகைவர்களுக்கு எமன் போன்றவன் எனக் கம்பர் சுகேதுவை காட்சிப்படுத் திருக்க தன் மகள் தாடகைக்கு தேர்ந்தெடுக்கும் கணவனை ஆய்ந்தறியாமல் தேர்ந்தெடுக்கமாட்டான். சுந்தன் என்ற வலிமை வாய்ந்தவனை தன் மகளுக்கு மணம் முடித்துவைத்தான்.காமனும், இரதியும், போலசுந்தனும், தாடகையும் வாழ்ந்தனர்.இதனை,

**"அன்பும்அறனும்உடைத்தாயின்இல்வாழ்க்கை**

**பண்பும்பயனும்அது" 5**

என்ற குறளுக் கேற்ப இவ்விருவரும் சிறப்பான இல்லற வாழ்க்கை நடத்திய தன் பயனாகத் திருமகளை ஒத்த தாடகைகருவுற்றாள்.மாரீசன், சுபாகு என்ற இருமைந்தர்ர்களைப் பெற்றெடுத்தாள். தம்புதல்வர்கள் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்பதை அறிந்த சுந்தன் மிகுந்த செருக்குடன் அகத்திய முனிவன் ஆசிரமத்தை அடைந்தான். தன் வலிமையால் அங்குள்ள மரங்களை வேருடன்பிடுங்கி எறிந்தான். மான் முதலிய உயிரினங்களை அழித்தான். அதனால் கோபம் அடைந்த அகத்திய முனிவர் சுந்தனை நோக்கி நெருப்புப் பொறி பறக்குமாறு விழித்தார். சுந்தன் சாம்பலாகினான். இதனை,

**"தழல் எழவிழித்தனன் சாம்பல் ஆயினான்"**

**(பா.கா. தாடகைவதைப்படலம். மிகை.பா.82)**

என்ற பாடல் வழி உணர முடிகிறது.

**தாடகை பெற்ற சாபம்**

சாபம் என்பது நல்லவர்களுக்கு வரமாக மாறும்.தீயவர்களை அழிக்கும். எவ்வளவு வரங்கள் பெற்றாலும், தாங்கள் பெற்ற வரத்தின் பலத்தால் நல்லவர்களை ஒருபோதும் அழிக்க முடியாது. ஆனால், ஆற்றாமல் அழுது பதறிய நெஞ்சிலிருந்து வந்த வார்த்தை சாபமாக மாறி எப்பேற் பட்ட வலிமையான மனிதனையும் அழித்து விடும்.சாபம் தருவதற்கு தகுதி வாய்ந்ததவர்களாக கருதப்படுபவர்கள் துறவி, முனிவர்கள், பத்தினிப் பெண்டிர் போன்றோர் ஆவர்.

**தாடகையின்ஆளுமை**

ஒருவரின் தோற்றமே அவரின் ஆளுமையைக் காட்டும் கண்ணாடியாக விளங்கும். அவ்வகையில் முனிவர் விசுவாமித்திரரேதன் கூற்றின் வாயிலாக வலிமையை முன்னிறுத்தி தாடகையின் ஆளுமையை இராமனிடம் பகருவதை,

**“என்றலும்இராமனைநோக்கிஇன்னுயிர்**

**கொன்றுஉழல்வாழ்க்கையள்கூற்றின்தோற்றத்தள்**

**அன்றியும்ஐயிருநூறுமையல்மா**

**ஒன்றியவலியினள்உறுதிகேள்என”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.21)**

என்ற பாடலில் இராமனைப் பார்த்து இனிய உயிர்களை எல்லாம் கொன்று திரியும் வாழ்க் கையுடைய வளாகவும், எமன் போன்ற தோற்றத்தை உடையவள் என்றும் ஆயிரமதயானைகளின் வலிமையுடைய வளாகத் திகழ்வதை காட்சிப்படுத்துகிறார். மேலும், பாவெல்லாம் திரண்டு பெண் உருவெடுத்தார் போன்று அப்பாலைவனத்தில் திரிந்த அரக்கி, மண்ணுல கைபெயர்த்தெடுப்பவளாகவும், விண்ணுலகை இடித்து தகர்ப்பவளாகவும்

விசுவாமித்திரர் தாடகையின் வலிமையையும், கொடுமையையும் காட்சிப்படுத்துவதை,

**“மண் உருத்து எடுப்பினும் கடலைவாரினும்**

**விண் உருத்து இடுப்பினும் வேண்டின் செய்கிற்பாள்”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.22)**

என்ற பாடலடிகள் மூலம் விளக்குகிறார்.

தாடகை அரக்கியாவதற்கு முன் அழகியமயில் போன்ற தோற்றத்தை உடையவளாக பிறந்தாள். தாடகை அரக்கியான போது பெரியமலைகள் இரண்டுடனும் நஞ்சுடனும் தோன்றிய வளாககாணப்பட்டாள் என்று சுட்டப்படுவதை,

**“பெருவரைஇரண்டொடும்பிறந்தநஞ்சு”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.23)**

என்பதன் மூலம் அறிய முடிகிறது.

அழகிய பிரமிப்புகளை வருணிக்கும் கவித்துவமான சிந்தனைகளைச் சற்றே மாற்றி எதிர் மறையான பிரமிப்புகளை உவமைகளோடு எடுத்தியம்பிய கம்பனின் உருவகங்களும் உற்று நோக்கத்தக்கன.

**தாடகையின்குழல்**

பெண்களின் குழலை வருணிப்பது இயல்பு. அவ்வகையில் அகத்தியரின் சாபத்தால் அரக்கியான தாடகையினுடைய குழல் தாழ்ந்து நீண்டு இருப்பதை,

**“பின்னும் தாழ் குழல் பேதை மைப்பெண் இவள்”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.43)**

என்பதாகும்.

**தாடகையின் சாயல்**

ஒரு பெண்ணின் உருவத்தை வருணிக்கும் இடத்தில் உலகோரால் கண்வியக்கும்.ஒரு பொருளான் ஒப்பிடுவது இயல்பு. அவ்வகையில் அழகிய சாயலையுடைய மயிலைப் போன்ற பெண் என்று ஒப்பிடுவது உண்டு. ஆனால், தாடகையின் சாயலைக் குறிப்பிடும் இடத்தில் யாராலும் கண்டு இரசிக்க முடியாத, பயமுறுத்தும் ஓர் இயற்கை தன்மையை அவள் சாயலோடு ஏற்றி கூறுகிறார். அதாவது.

**“அல்லின் மாரி அனைய நிறத்தவள்”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.49)**

எனக்குறிப்பிடுகிறார்.

**தாடகையின் கண்**

ஒருவர் உண்மை சொல்கிறாரா! அல்லது பொய் சொல்லுகிறாரா என்று அவரின் கண்களே காட்டிக் கொடுத்துவிடும். ஒருவர் நம்மைப் பார்க்கும் பார்வையால் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் உணரமுடியும். அவ்வகையில் தாடகை எனும் அரக்கி இராமனையும், இலக்குவனனையும் கொன்று தின்னும் வேகத்துடன் இருக்கிறாள் என்பதை, அவள் கண் அசைவுகளால் வெளிப்படுவதை,

**“மேகம் அவை இற்று உக விழித்தனள் புழுங்கி**

**மாக வரை இற்று உக உதைத்தனள் மதித்திண்”**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.35)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**தாடகையின்பல் வாய்**

தாடகையின் பல்லின் தன்மைகளை விளக்கு மிடத்தில் சந்திரப்பிறைகளைப் போல வளைந்த பற்களை உடையவளாகவும்

அப்பற்களின் கடைப்பகுதியும் விளங்குமாறு அமையப் பெற்றவள் என்றும் குகை போன்ற வாயை உடையவள் என்றும் வருணிப்பதை,

**"இறைக் கடை துடித்த புருவத்தள் எயிறு என்னும்**

**பிறைக் கடை பிறக்கிட மடித்த பில வாயள்"**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.31)**

என்று கவிக் கூற்றின் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

**தாடகையின்கை**

அரக்கியான தாடகை கையணிகளா கப்பாம் புகளையும், கையில் சூலமும் உடையவளாய்க் காட்சிப்படுத்துவ தோடு மட்டுமல்லாமல் மதம் பொழிகின்ற ஆண்யானைகள் இரண்டின் துதிக்கைகளை இணைத்தாற்போன்று அவ்வரக்கியின் ஒரு கைகாட்சியளிப்பதாய்க் காட்சிப்படுத்தி நம்மை கண் விரியவைப்பதை,

**"சூடக அரவு உறழ்சூலக் கையினள்"**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.24)**

**"கடம் கலுழ் தடங்களிறு கையொடுகை தெற்றா"**

**(பா.கா.தாடகைவதைப்படலம். பா.32)**

என்ற பாடலடிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

தாடகைதன் கணவன் இறந்தான் என்ற செய்தியை கேட்டதும் மிகுந்த கோபத்துடன் முனிவரை நோக்கி செல்லவே அரக்கியாகுக என்ற சாபம் கொடுத்ததையும் அறியமுடிந்தது. முனிவன் சாபம் கொடுத்த தன் விளைவாக அரக்கிக்கே உண்டான குணங்கள் அவளிடம் குடிக்கொண்டு

உயிர்களை கொன்று தின்பவளாக வாழ்ந்து வந்தாள். தாடகையின் பேச்சின் வெளிப்பாட்டிலும், உருவ அமைப்பின் மூலமும் அவளின் ஆளுமைத் திறத்தை உணர முடிகிறது. அரக்கிக்கே உண்டான கர்வத் தோடும், ஆணவம் மிகுந்த கோபத் தோடும் இராமனை எதிர்கொண்ட ஆற்றலை வெளிக்கொணர முடிந்தது. பெண் என்று கருதி தாடகையைக் கொல்லத் தயங்கும் இராமனின் ஐயத்தைத் தெளிவுப்படுத்தி தாடகை வதம் நிகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது.

**சான்றெண்விளக்கம்**

1) **புலவர்கி. வேலாயுதன் (க.ஆ), கம்பனில்பலவண்ணங்கள், பக், 44 – 45**

2) **ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), கலிங்கத்துப்பரணி, கா.பா. பா.வரி – 86**

3) **ந.சுப்புரெட்டியர், கம்பன்படைத்தசிறுபாத்திரங்கள், ப.12**

4) **அரங்க. இராமலிங்கம், தாடகை, ப.11**

5) **மு.வரதராசனார், (உ.ஆ) திருக்குறள். குறள்.எ.45**